04.09.2024 ம.சா.1 லிங்கத்துரை Mcop 417/2022

(சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு 3ம்எதிர்மனுதாரர் தரப்பில் தரப்பில் குறுக்குவிசாரணை

நான் பாத்திர வியாபாரம் செய்து வருகிறேன். நான் முதலில் தாக்கல் செய்த மனுவில் பழைய இரும்பு வியாபாரம் பார்த்ததாக தான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் வியாபாரம் பார்க்காததால் தான் மனுவில் ஒரு வியாபாரமும், நிரூபண வாக்குமூலத்திலும் ஒரு வியாபாரம் பார்ப்பதாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு எவ்வளவு வருமானம் வருகிறது என்பதை காட்டுவதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சம்பவத்தன்று நான் ஒட்டிசென்று டி.என்.76ஏபி.0879 என்ற இருசக்கர வாகனம் எனக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். நான் இரவு 8.30மணிக்கு ஒட்டி சென்றிருப்பேனா என்றால் இரவு 7மணிக்கு சென்றேன். விபத்து நடந்த அன்று நான் புகார் கொடுக்கவில்லை 3 நாட்கள் கழித்து தான் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். நான் வண்டியை ஒட்டி சென்ற போது மது அருந்தி இருந்தேன் என்றால் சரியல்ல. மா.சா.ஆ2ல் நான் குடிபோதையில் இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் குடிபோதையில் வாகனத்தை ஒட்டி விபத்து ஏற்படுத்தியதால் தான் 3 நாட்கள் கழித்து புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் ஒட்டி சென்ற எனது வாகனத்திற்கு காப்பீடு உண்டா என்றால் உண்டு. எனது வாகனத்திற்கு காப்பீடு நிறுவனத்தை வழக்கில் கட்சி சேர்க்கவில்லை என்றால் சரிதான். எனக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்றாலும் எலும்பு முறிவு காயம் கிடையாது என்றாலும் சரியல்ல. எனக்கு தற்போதும் பிளேட் உள்ளது. எனக்கு ஏற்பட்ட காயத்திற்கு நான் மருத்துவ சிகிச்சை எடுத்ததற்கான செலவுகளை காட்டுவதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் நிரூபண வாக்குமூலத்தில் நான் பல்வேறு தனியார் மருத்துவமனைகளில் தற்போது வரை சிகிச்சை பெற்று வருகிறேன் என சொல்லியுள்ளதை காட்டுவதற்கான ஆவணம் தாக்கல்

செய்யவில்லை என்றால் சரிதான். இன்று என்னுடன் நீதிமன்றத்திற்கு யாரும்வரவில்லை நான் தனியாக தான் வந்துள்ளேன் என்றால் சரிதான். என் நிரூபண வாக்குமூலத்தில் பிறா் உதவியின்றி என்னால் வரமுடியாது என சொல்லியுள்ளது தவறு என்றால் சரியல்ல. விபத்து சமயம் 1ம்எதிா்மனுதாருக்கு உரிய பொதுப்பணிவில்லை கிடையாது என்றால் சரியல்ல. விபத்தில் ஈடுபட்ட டி.என்.67ஏபி 7868 என்ற ஆட்டோவிற்கு தகுதி சான்று கிடையாது என்றால் அது எனக்கு தெரியாது. உரிய பொதுபணிவில்லை இல்லாமலும், தகுதிச்சான்று இல்லாமலும் வாகனத்தை ஓட்டியதால் எனக்கு 1,2 எதிா்மனுதாரா்கள் மட்டும் தான் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவா்கள் என்றால் சரியல்ல. விபத்து சமயம் நான் மது போதையில் வாகனத்தை ஓட்டி விபத்தை ஏற்படுத்தியதால் 3ம்எதிா்மனுதாரா் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவா் அல்ல என்றால் சரியல்ல. பல்வேறு தலைப்புகளீல் நான் கோரியுள்ள இழப்பீடு தொகை அதிகமானது என்றால் சரியல்ல. 3ம்எதிா்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல.